**செய்தி வெளியீடு எண்:154** **நாள் : 04/03/2016**

**<u>தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்</u>**
**<u>பத்திரிகை செய்தி</u>**

தமிழக சட்டமன்றப் பேரவையில் 2014–2015–ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.18– மீதான விவாதத்தின் போது மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களால் அம்பத்தூர் காலணி அலகின் உற்பத்தி திறனை மேம்படுத்தி தொழிலாளர்கள் அதிக வேலை வாய்ப்பினைப் பெறவும் நல்ல தரமான காலணிகள் மற்றும் தோல் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்திடும் வகையில் நவீன இயந்திரங்கள் ரூ.1.50 கோடி செலவில் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் இக்காலணி அலகுக்கு புதிய அதிநவீன கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மத்திய காலணி பயிற்சி மையத்தின் இயக்குநரிடம் கலந்தாலோசித்து இவ்வலகில் மேற்படி காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியினை அதிகரித்திடவும், தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்தவும் தேவைப்படும் இயந்திரங்கள் பட்டியலிடப்பட்டு அதன் அடிப்படையில் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி ரூ.1.50 கோடி மதிப்பில் 21 எண்ணிக்கையிலான புதிய நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வியந்திரங்கள் நிறுவியதன் மூலம் ஒரு நாளைக்கு ஷூக்கள் 600 இணைகள் அல்லது பூட்ஸ்கள் 400 இணைகள் உற்பத்தி செய்திட இயலும். பிரதிமாதம் ரூ.60.00 லட்சம் முதல் ரூ.67.00 இலட்சம் வரையிலும் ஒரு வருடத்திற்கு ரூ.720.00 இலட்சம் முதல் ரூ.800.00 இலட்சம் வரையில் உற்பத்தி செய்திட இயலும்.

மேலும் நவீன இயந்திரங்கள் நிறுவுவதன் மூலம் அலகில் கூடுதல் வேலை வாய்ப்பு வழங்கிட இயலும். தற்சமயம் பணிபுரியும் 20 தொழிலாளர்களுடன் கூடுதலாக 25 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வாய்ப்பு ஏற்படும்.

அம்பத்தூர் காலணி அலகில் உள்ள கட்டடங்கள் மிகவும் பழமையானதாக உள்ளதால் அவற்றை படியப்படியாக சீரமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வரிசையில் அம்பத்தூர் காலணி அலகில் உள்ள கட்டடம் ரூ.5.27 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் 4.3.2016 காலை 10.00 மணிக்கு அம்பத்தூரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான காலணி அலகில் 5.27 ரூபாய் இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட கட்டடததை திறந்து வைத்து ரூ.1.50 கோடி செலவில் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ள புதிய நவீன காலணி தயாரிக்கும் இயந்திரங்களை துவக்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் அரசு முதன்மை செயலாளர், கைத்தறி,கைததிறன் துணி நூல் மற்றும் கதர் துறை, சென்னை தலைமைச் செயல் அலுவலர், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**